முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No.335/2016

தேதி : 22-01-2025

(பி.வா.சா.2) – திரு.சிவக்குமார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. நான் தற்போது எங்கு குடியிருக்கிறேன் என்றால்பழனி அடிவாரத்தில். இதற்கு முன்பு எங்கு குடியிருந்தேன் என்றால் கடந்த 20, 25 ஆண்டாக அங்கு தான் குடியிருக்கிறேன். என்ன வேலை பார்க்கிறேன் என்றால் அண்ணாமலை டிராவல்ஸ்ஸில் ஓட்டுநராக வேலை பார்க்கிறேன். சக்தி கல்யாண மண்டபம் அருகில் ஆட்டோ ஓட்டினேனா என்றால் இல்லை. அங்கு வாடகைக்கு டெம்போ ஓட்டினேன் என்றால் ஆமாம். அந்த சமயத்தில் பிரதிவாதியின் தம்பி 2ம் பிரதிவாதி ஆட்டோ ஓட்டி கொண்டிருந்தார் என்றால் சரிதான். அந்த வகையில் அவர் எனக்கு பழக்கம் என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதி அழைத்ததன்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் ஆமாம்.

2. உயில் ஆவணத்தில் நானும், 1ம் பிரதிவாதியும் சேர்ந்து கையெழுத்து போட்டோமா என்றால் இல்லை, பத்திர அலுவலகத்தில் நானும், மாரியம்மாளும் மற்றும் மற்றொரு சாட்சியும் இருந்தார், அவருடைய பெயர் ஞாபகமில்லை. அந்த மற்றொரு நபர் எந்த ஊரை சார்ந்தவர் என்றால் நெய்க்காரப்பட்டி என்று கேள்விப்பட்டேன். உயில் ஆவணத்தை தயார் செய்தவரை தெரியுமா என்றால் தெரியும். முருகானந்தம் அலுவலகத்தில் தான் கையெழுத்து போட்டோம் என்றால் இல்லை, பத்திர அலுவலகத்தில் மாரியம்மாள் கையெழுத்து போட்டார்கள் அதன் பின்னர் நான் கையெழுத்து போட்டேன். அந்த ஆவணத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் தெரியும், என்னிடம் படித்து காண்பிக்கப்பட்டது. அதில் என்ன விபரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் ஏற்கனவே இருந்த உயில் ரத்துச் செய்யப்பட்டு மற்றொரு உயில் எழுதப்பட்டது.

3. மாரியம்மாள் அழைத்ததன்பேரில் உயில் சாசனத்தில் கையெழுத்து போட்டதாக சொல்வது தவறு என்றும், 1ம் பிரதிவாதி சொன்னதன் பேரில்தான் கையெழுத்து போட்டேன் என்றால் அது தவறு. மாரியம்மாளின் கணவர் மற்றும் வாரிசுகள் பெயர் தெரியாது என்றால் கணவர் பெயர் தெரியாது, ஆனால் வாரிசுகள் பெயர் தெரியும். மேற்படி வாரிசுகளின் பெயர் ராஜேந்திரன், மணிகண்டன், சிங்கப்பூர்கார் என்று சொல்வார்கள் அவருடைய பெயர் தெரியாது, மற்றொரு நபர் Fire Serviceல் ஓட்டுநராக உள்ளார் அவருடைய பெயரும் ஞாபகமில்லை. வாரிசுகள் எப்படி பழக்கம் என்றால் ராஜேந்திரன், மணிகண்டன் ஓட்டுநராக இருப்பதால் அவர்களை தெரியும் மற்றும் Fire serviceல் பணிபுரிபவரின் மகனையும் தெரியும். வேல்முருகனை எப்படி தெரியும் என்றால் அவர் ஓட்டுநராக இருந்ததால் தெரியும். எனக்கு வேல்முருகனை தெரியும் என்று சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல.

4. மாரியம்மாள் வழக்கு சொத்து சம்பந்தமாக எங்கெங்கு யார் யாரிடம் வாங்கிருக்கிறார் என்பது பற்றிய விபரம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். நான் சொல்கிற உயில் சாசனமானது இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றும், 1ம் பிரதிவாதி சொன்னதற்கு இணங்க பத்திர அலுவலகத்தில் வைத்துதான் கையெழுத்து போட்டேன் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. மாரியம்மாள் எப்படி அழைத்தார் என்பது பற்றிய விபரத்தை நிரூபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றும், அவர்கள் அழைத்ததன்பேரில் உயில் சாசனத்தில் கையெழுத்து போட்டேன் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. உயில் ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்து எங்கு உள்ளது என்றால் அண்ணாநகரில் உள்ளது. சொத்தின் சர்வே எண், பட்டா எண், நான்குமால், மின் இணைப்பு எண், விஸ்தீரணம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது.

5. 1ம் பிரதிவாதி தற்போது கோவையில்தான் உள்ளார் என்றால் ஆமாம், அப்படிதான் கேள்விப்பட்டுள்ளேன். அவர் என்னுடன்தான் வந்துள்ளார் என்றால் ஆமாம். எத்தனை ஆண்டாக அங்கிருந்தார் என்றால் அது பற்றி தெரியாது. எப்போது உயில் சாசனத்தில் கையெழுத்து போட்டேன் என்றால் 2015ல். அப்போது 1ம் பிரதிவாதி எங்கு இருந்தார் என்றால் கோவையில் தான் இருந்தார். மற்ற பிரதிவாதிகள் எங்கிருக்கிறார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. 2ம் பிரதிவாதியின் குடும்பத்தார்கள் எங்கு உள்ளார்கள் என்றால் தெரியாது. மாரிய ம்மாள் உயில் சாசனத்தில் கைரேகை

இட்டார்களா அல்லது கையெழுத்து போட்டார்களா என்றால் கையெழுத்து போட்டார்கள்.

6. வழக்கு சொத்தில் வாதிகள் குடியிருக்கின்ற விபரம் தெரியுமா என்றால் வாதிகள் அங்கு குடியிருக்கவில்லை, பழைய வீடு என்பதால் யாரும் குடியிருக்கவில்லை. அந்த விபரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் அந்த வழியில் போகும்போது பார்த்திருக்கின்றேன். நான் சொல்வது தவறு என்றும், வாதிகள் குடியிருக்கவில்லை என்று வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதா என்றால் ஆமாம். முதல் பக்கத்தில் உள்ள கையெழுத்து யாருடையது என்றால் மாரியம்மாள் உடையது.

7. மாரியம்மாளின் முதல் பக்கத்தில் உள்ள கையெழுத்திற்கும் மற்ற பக்கத்தில் உள்ள கையெழுத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் ஆமாம், வயதானவர் என்பதால் நடுக்கம் இருந்திருக்கலாம். தயார் செய்த வைத்த நிரூபணவாக்குமூலத்தில் நீதிமன்றத்தில் வைத்து கையெழுத்து போட்டேன் என்றால் நான் சொல்ல நிரூபணவாக்குமூலம் தயார் செய்யப்பட்டது அதை நீதிமன்றத்தில் வைத்து கையெழுத்து போட்டேன். 1ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க தயார் செய்த வைத்து நிரூபணவாக்மூலத்தில் கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல. உயில் சாசனத்தில் கையெழுத்து போட்டதாக சொல்லப்படும் சமயத்தில் மாரியம்மாளுக்கு சுமார் 85 வயது இருக்கும் என்றால் தெரியாது, ஆனால் சுமார் 70 வயது இருக்கலாம்.

8. மாரியம்மாளுக்கு 85 வயது இருந்ததால் அவருக்கு நல்ல மனநிலை இல்லாததததை பயன்படுத்தி 1ம் பிரதிவாதி பத்திர அலுவலகத்தில் வைத்து உயில் சாசனத்தை தயார் செய்தார் என்றும், அதை நான் பத்திர அலுவகத்தில் வைத்து கையெழுத்து போட்டேன் என்றும், நான் சொல்வது போல் அதை நான் பத்திர அலுவலகத்தில் வைத்து கையெழுத்து போடவில்லை என்றால் சரியல்ல. உயில் ஆவணத்திற்கு முன்பு என்ன நடந்தது என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான், ஆனால் உயில் சாசனம் எழுதும்போது ஏற்கனவே இருந்த உயிலை ரத்து செய்து தன்னை பராமரித்த இரு நபருக்கு உயில் சாசனம் எழுதுவதாக சொன்னார்.

9. உயில் ஆவணம் எழுதும்போது 1,2 பிரதிவாதிகள் எங்கிருந்தார்கள் என்றால் தெரியாது. உண்மையில் மாரியம்மாள் 1,2 பிரதிவாதிகள் தன்னை பராமரிப்பதாக சொல்லியிருந்தார்கள் என்றால் அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்ற விபரத்தையும் சொல்லியிருப்பார்கள் என்றும், அப்படி அவர்கள் சொல்லாததால்தான் உயில் எழுதும்போது 1,2 பிரதிவாதிகள் எங்கு இருந்தார்கள் எனக்கு தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே இருந்த உயில் ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் சரியல்ல. ரத்து செய்யப்பட்டதாக சொல்லப்படும் ஆவண எண் தெரியுமா என்றால் தெரியாது.

10. மாரியம்மாளை நான் பார்க்கவில்லை என்றும், மாரியம்மாளுக்கும் எனக்கும் சம்மந்தமில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளுடன் சேர்ந்து வாதிகளுக்கு சொத்து வழங்கக்கூடாது என்று சொல்லி உயில் ஆவணம் உற்பத்தி செய்யப்பட்டது என்றும், நான் சொல்வதுபோல் மாரியம்மாள் முன்பு நான் கையெழுத்து போடவில்லை என்றால் சரியல்ல.

ஒம்./– K. ரேணுகாதேவி
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.